Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 69

National Tamil Daily தேசிய தினசரி

(21 4-65)

விசுவாவசு சித்திரை 9 துல்ஹஜ் பிறை 18 புதன்கிழமை

## திடீர் மாற்றம்!

கொழும்பு, செவ்வாய்

போக்குவரத்து மந்திரி காரியாலயத்தில் கூட்டர சாங்கத்தில் போக்குவரத்து மந்திரியினால் வேலைக்கமர்த்தப்பட்ட மூன்று உதவிக் காரியதரிசிகளும், 16 குமாஸ்தாக்களும் உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த மூன்று உதவிக் காரியதரிசிகளில் ஒருவர் சுதந்திரக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரின் சகோதரராவர்.

தற்பொழுது மாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தங்கள் பதவியை உபயோகித்து கூட்டரசாங்கம் பதவிக்கு வருவதற்காக பல வழிகளில் ஈடுபாடுகாட்டினர் என்று தற்பொழுது போக்குவரத்து மந்திரியாயிருக்கும் திரு ஹுருலே யின்கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது தைத் தொடர்ந்து இந்த விஷயத்தை ஆராயும்படி மந்திரிஸ்ரீதரக் காரியதரிசிக்குக் கட்டளையிட்டிருந்தார், இதையடுத்தே இந்தத்திடீர் மாற்றங்கள் நடைபெற்றன கூட்டரசாங்கம் பதவியிலிருக்கும் பொழுது இந்த மூன்று உதவிக்காரியதரிசிகளும் கூட்டரசாங்கத்திற்குச் சாதகமாக தங்கள் நிர்வாகமுறையிலும் நடந்துகொண்டார்கள் என்று தற்பொழுது புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

தனக்குக்கீழ் இயங்கும்

(5-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை குடியரசாகும்

## அரசியல் திட்டத்தை திருத்த ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

இலங்கையைக் குடியரசாக்குவது பற்றியும், அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பது பற்றியும் மற்றும் சில அம்சங்கள் பற்றியும் இலங்கை அரசியல் சாஸனத்தைத் திருத்துவதுபற்றியும் ஆராய்வதற்கு பார்லிமெண்டின் இருசபைகளின் அங்கத்தவர்களைக் கொண்ட தெரிவுக் கமிட்டி ஒன்றை நியமிக்கவேண்டுமெனக்கோரும் பிரேரணையொன்றை ஜனப்பிரதிநிதிகள் சபை முதல்வர் திரு சி. பி. டி' சில்வா கொண்டுவந்திருக்கிறார்.

பார்லிமெண்டின் இன்றைய கூட்ட நிகழ்ச்சி நிரலில் இப்பிரேரணை இடம்பெற்றுள்ளது திரு. சில்வா கொண்டுவந்துள்ள பிரேரணையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அவசியமெனக் கருதப்படும் மற்றும் சில விஷயங்களுடன் இலங்கையைக் குடியரசாக்குவது பற்றியும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பது பற்றியும் செனட் சபையின் நிலை, ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதுபற்றியும் ஆராயும்பொருட்டும் அரசாங்க சேவைக் கமிஷன், நீதிபரிபாலனசேவைக் கமிஷன் பற்றியும் பரிசீலனை செய்யும்பொருட்டும் இதன்மூலம் 1946-ம், 47-ம் வருடத்திய இலங்கை அரசியல் சாஸனத்தில் திருத்தம் செய்யும் நோக்கமாக அதுபற்றி பரிசீலனை செய்வதற்கு ஜனப்பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களையும் செனட்சபை அங்கத்தவர்களையும் கொண்ட தெரிவுக் கமிட்டியொன்றைநியமிக்கவேண்டும்.

## சதிவழக்கு:- எதிரிகளின் கோரிக்கை கவர்னர் ஜெனரல் நிராகரித்தார்

கொழும்பு, செவ்வாய்

சதிவழக்கில் தலா பத்து வருடச் சிறைத் தண்டனையு சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படியும் தண்டனை விதிக்கப்பட்ட பதினொரு பிரதிவாதிகளும் தங்களது அப்பீல் விசாரணை முடியும்வரை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறுத்திவைக்கும்படி கோரி கவர்னர் ஜெனரலுக்கு விடுத்த கோரிக்கையை கவர்னர்ஜெனரல் நிராகரித்துவிட்டார்.

பிரிவிகவுன்சில் அப்பீல் முடிவு தெரியும்வரை சதிவழக்கு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அமுல் செய்யாது நிறுத்திவைக்கும்படி பதினொரு பிரதிவாதிகளும் கவர்னர் ஜெனரலுக்கு மனுச் செய்திருந்தனர். இதற்கு கவர்னர் ஜெனரலின் காரியதரிசி அனுப்பியுள்ள பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"உங்கள் கடிதம் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் உங்கள் கோரிக்கையை அனுமதிக்க முடியாதென்பதை கவர்னர்ஜெனரல் விருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறார்".

சிறைத்தண்டனையும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான சில நடவடிக்கைகளும் ஏப்ரல் 7-ந் திகதி முதல் அமுலுக்கு வந்தன.

இதே சமயம் சதிவழக்குத் தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்வது சம்பந்தமாக இங்கு ஆலோசனை செய்ய வந்துள்ள திரு ஈ எப் என் கிரேஷியன் நேற்று முழுவதும் சதிவழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்தினர்

## பிணம் சுடச்சென்றவர்கள் பிணமானர்கள்!

### மயானத்தில் ஏற்பட்டதகராறு இருவர் கொலையில் முடிந்தது

சாவகச்சேரி, செவ்வாய்

மந்துவில் மயானத்தில் நேற்று இருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட துக்ககரமானசம்பவம் நிகழ்ந்துள்ளது. பிரேதம் ஒன்றை தகனம் செய்ய மயானத்துக்கு எடுத்துச் சென்றசமயம் அங்கு ஏற்பட்ட சச்சரவு காரணமாக இரண்டுபேர்கள் குத்திக் கொலை செய்யப்பட்டு ஸ்தலத்திலேயே மாண்டனர். மூன்று பிரேதங்களும் நேற்று மாலைவரை தகனம் செய்யப்படாமலிருந்தது. இக்கொலை சம்பந்தமாக சந்தேகநபர் ஒருவர் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றுமொரு சந்தேக நபர் தலைமறைவாகத் திரிவதாகக் கூறப்படுகிறது.

இறந்த ஒருவரின் சடலத்தைத் தகனம் செய்வதற்காக நேற்று அவரது பிரேதம் மந்துவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு சென்ற இருபகுதியினருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து உண்டாகிய சச்சரவினால் இருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனராம். கே. சுப்பிரமணியம், கே. சித்திரா ஆகிய இருவருமே கொலையுண்டவர்களாவார்கள். சிட்டினன் என்பவர் கடுமையான கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களில் ஒருவரான கே. நாகமுத்துவும் காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் பொலிஸ் பாதுகாப்புடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றுமொரு சந்தேகநபரான நவரத்தினம் என்பவர் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

சாவகச்சேரி மாஜிஸ்ரேட் திரு. ஜேபேர்ட் சில்வா ஸ்தலத்துக்கு சென்று விசாரணை நடத்திவிட்டு மரணவிசாரணை நடைபெறும்வரை இறந்தவரின் பிரேதத்தையும் தகனம் செய்ய வேண்டுமென உத்தரவிட்டார்.

மரணவிசாரணை இன்று நடைபெற்றது. சாவகச்சேரிப் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்கின்றனர்.

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்

### பழைய இடங்களுக்கு மாற்றப்படுவர்

கொழும்பு, செவ்வாய்

"சென்ற ஆறுமாத காலத்துக்குள் அரசியல் நோக்கத்துடன் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பழைய இடங்களுக்கு மாற்றம் செய்யும்படி மாகாண உதவி வித்தியாதிபதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது"

இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி இடமாற்றசம்பந்தமாக ஆராய கல்வி அமைச்சர் நியமித்த கமிட்டி உத்தரவிட்டுள்ளது.

அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு எந்தவொரு கட்சிக்காகவும் ஆதரவு தேடிய ஆசிரியர்கள்பற்றியும் உதவி வித்தியாதிபதிகள் தகவல் சேகரிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனராம்.

## மேதினக் கூட்டத்தில் அரசாங்கக் கட்சிகள்

கொழும்பு, செவ்வாய்

மே முதல் திகதி காலிமுகத்திடலில் நடைபெறவிருக்கும் மேதினக்கூட்டத்தில் தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லாக் கட்சிகளும் பங்குபற்று மாறு அரசாங்க பாராளுமன்றக் கட்சி கேட்டுக்கொண்டிருக்கிறது.

## யூகோ-பிரிட்டன் ஆதரவு

பெல்கிரேட், ஏப். 20

கம்போடியா பற்றி சர்வதேச மகாநாடு நடைபெற வேண்டுமென்ற கருத்தை இங்கு கூடிப் பேசிய யூகோஸ்லேவிய-பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரிகள் ஆதரித்திருக்கிறார்கள்.

## ஸ்தலஸ்தாபன நிர்வாகமுறை திருத்தி அமைக்கப்படும்

### இரு முக்கிய மகாநாடுகளை மந்திரி திருச்செல்வம் கூட்டுகிறார்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

ஸ்தலஸ்தாபனங்களின் நிர்வாகமுறையை அமைக்கும் பொருட்டும் மாவட்டசபைகளை அமைப்பது குறித்தும் ஆராய்வதற்கென ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் இரண்டு முக்கிய மகாநாடுகளை மிகவிரைவில் கூட்டவிருக்கிறார்.

உள்ளூராட்சி சேவை நிர்வாக முறைகளில் திருத்தம் செய்யாது நிர்வாக அமைப்பையே புதியவகையில் உருவாக்கும் நோக்கத்துடன் இந்த மகாநாடுகளை நடத்த மந்திரி தீர்மானித்துள்ளார். புதிய நிர்வாக அமைப்பின் கீழ் மாவட்டசபை நிறுவுவது அவற்றின் நிர்வாகம்பற்றியும் மந்திரி ஆலோசனை நடத்துவார்.

உள்ளூராட்சி சேவைஅமைச்சு, உள்ளூராட்சி இலாகா ஆகியவற்றின் உயர்தர அதிகாரிகள் நாடு பூராவுமுள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஆகியோர் முதலாவது மகாநாட்டில் கலந்து கொள்வர். இரண்டாவது மகாநாட்டில் நாடு பூராவும் உள்ள மாநகரசபைகளின் மேயர்கள், நகரசபை, பட்டினசபைஆகியவற்றின் தலைவர்கள் பங்கு கொள்வார்கள். இந்த இரண்டு மகாநாடுகளில் செய்யப்படும் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஸ்தலஸ்தாபன நிர்வாகமுறையை மந்திரி திருத்தி அமைப்பார் எனச் சொல்லப்படுகிறது.

## சாஸ்திரி யு. எஸ். விஜயம் ரத்து!

புதுடில்லி, ஏப் 20

"வியட்நாமிலும், இதர இடங்களிலும் நாம் மேற்கொள்ளும் கொள்கை பிறருக்குக் கோபத்தை உண்டாக்கும் என்பதால் அதைக் கைவிட முடியாது" என இந்தியப் பிரதமர் சாஸ்திரியும், வெளிநாட்டுமந்திரி திரு சுவர்ண்சிங்கும் லோகசபையில் அறிவித்தார்கள்

"பிரதமர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தமது விஜயத்தை ஒத்திப்போடும்படி அமெரிக்க ஜனாதிபதி என்ன காரணத்தைக்கொண்டு கேட்டிருந்தாலும் நம் கொள்கையை மாற்ற முடியாது நமது வெளிநாட்டுக் கொள்கை எப்போதும் சுயேச்சையாக இருந்து வந்தது எப்போதும் அப்படியே இருந்துவரும்" என்றும் பிரதமர் கூறினார்

வியட்நாம்பிரச்னையைஅமைதி வழியிலேயே தீர்க்கவேண்டும் என்பது இந்தியாவின் கொள்கை என்றும், ராணுவ முறையில் இல்லை என்றும் பிரதமரும் வெளிநாட்டு மந்திரியும் கூறி, பெரும் சிந்தனைக்குப் பின்பே இம்முடிவு செய்யப்பட்டது என்றார்கள்

இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரி தமது அமெரிக்க விஜயத்தை ரத்துச் செய்துவிட்டதாக வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங் கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

செந்த வாழ்க்கையைத் தூய்மையாக்கு வதோடு திறமையான கல்விமுறையை அமைப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 289.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 9 உ (21-4-65)


## யாழ்ப்பாணத்தின் தேவைகள்

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அவசரத் தேவைகள் பற்றி விவாதிக்கப்பட்டதுடன் முக்கிய தேவைகள் பற்றி ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அரசாங்க அதிபர் தலைமையில் உயர்தர அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அவசரத்தேவைகள்பல உள. மாவட்ட இணைப்புக்குழு ஆராய எடுத்துக் கொண்டுள்ள விஷயங்களில் இரண்டு அம்சங்கள் மிக முக்கியமானவை. ஒன்று கிராமப்பகுதிகளுக்கு மின்சார விநியோகம் மற்றது, குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி.

குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் யாழ்ப்பாண மாவட்டம் மிகப் பொருத்தம் என்பதே எமது கருத்து. கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்தபடியாக குடிசன நெருக்கமுடையது. யாழ்ப்பாண மாவட்டம் இங்கு இயற்கைவளம்குறைவாக உள்ளதால் விவசாயத்துறையை விட குடிசைக் கைத்தொழில், கைத் தொழில்,கனரகதொழில்களுக்கும் இப்பகுதி பொருத்தமானது. இன்று உலகில் குடிசைக் கைத்தொழில்விருத்தியில் ஜப்பான் முன்னிற்கிறது. அந்த நாட்டைப் பின்பற்றி இங்கும் நவீன முறையில் குடிசைக் கைத்தொழில்களைப் புதிதாக ஆரம்பிக்கலாம், இருக்கும் தொழில்களையும் விருத்தி செய்யலாம். இதற்கு ஜப்பான் நாட்டிலிருந்து குடிசைக் கைத்தொழில் நிபுணர்களின் உதவியைப் பெற முயற்சி செய்யலாம். குடிசைக் கைத்தொழில்களில் ஆர்வமுடைய இளைஞர்களை ஜப்பானுக்கு அனுப்பி அங்கு பயிற்சியளிக்க ஆவன செய்வதும் பயன்தரும்.

குடிசைக் கைத்தொழில்களை நவீனமுறையில் விருத்திசெய்வதற்கு மின்சாரம் இன்றியமையாதது. கிராமப்புறங்களுக்கு மின்சார வசதி கிடைக்கச் செய்வது தமது முக்கிய நோக்கம் என ஸ்தலஸ்தாபன மந்திரியும் தெரிவித்துள்ளார். இதை யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழு நியமித்துள்ள உயர்தர அதிகாரிகளின் குழு கவனத்திலிருத்தி தகுந்த முயற்சிகளை அவசர அவசரமாகச் செய்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு ஏற்கெனவேயுள்ள குடிசைக் கைத்தொழில்களையும் புதிதாக ஆரம்பிக்கக்கூடிய குடிசைக் கைத்தொழில்களையும் பற்றி நன்கு ஆராய வேண்டும்.

எவ்வித பாகுபாடும் காண்பிக்கப்படமாட்டாது என்று பிரதமர் அடிக்கடி உறுதியளித்து வருவதால் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசைக் கைத்தொழில்களை விருத்தி செய்ய எடுக்கும் நடவடிக்கைகள் நிச்சயம் பயனளிக்கக் கூடும். கொழும்புக்கருகில் உள்ள 'எக்கல' கைத்தொழில் பேட்டைபோல் இங்கும் ஒரு குடிசைக் கைத்தொழில்பேட்டை ஆரம்பிப்பதும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் கைத்தொழில் அபிவிருத்தியைப் படுத்தவும் உதவிபுரியும்.

# பாரதிதாசன் கவிதையில் ஒரு தனி நயம்

## இன்று முதலாவது சிரார்த்த தினம்



பல்லுடைக்கும் கொடுந்தமிழிலே புலவர்கள் மட்டுமே விளக்கத்தக்க பாக்களை இயற்றிவந்த தமிழ்ப் பாவலர் மரபில், பாமரரும் விளங்கிக் கொள்ளக்கூடிய இலகு தமிழில்— எளிய தமிழில் கவிதைகளை இயலற் புதுமையையும், புரட்சியையும் உண்டாக்கிய பெருமை புரட்சிக் கவிபாரதிக்கே உரியதாகும்.

இலகு தமிழில், அழகு நடையில், உணர்ச்சி கொப்பளிக்க கவிதை மூலம் அறிவுபுகட்டிய பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிறந்த கவிதைகளை இயற்றுவதில் அவருக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்த பெருமை கவிஞர் பாரதிதாசனுக்கு உரியதென்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

பாரதியின் புதுமையான, புரட்சிகரமான கவிதை நடையில் பற்றுக்கொண்டு அவர் தாசனாகி, அவர் விட்டுச் சென்ற சீரிய பணியை தொடர்ந்து செய்துவந்த பெருமையையும் கவிஞர் சுப்புரத்தினத்திற்கே உரியதாகும். உணர்ச்சியூட்டும் வீறுநடையில் வாழ்க்கையின் பல அம்சங்களையும் கவிதையின் மூலம் வார்த்து தமிழ் மக்களுக்கும், தமிழுக்கும் பெருந் தொண்டுபுரிந்த கவிஞர் பாரதிதாசன் மறைந்து இன்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. "எதிர்பாராத முத்தம்" 'குடும்பவிளக்கு' வரிசை போன்ற சிறந்த காவி எழுதிய கவிஞரின் திறமையை கட்டுரைமூலம் சொல்லவேண்டிய அவசியமே இல்லையாயினும், அவரின் கவித்துவத்தின் சிறப்பை அவரது முதலாவது சிரார்த்த தினமான இன்று நயந்துரைக்கின்றார். திரு. ஆ. தேவராசன் இக்கட்டுரையில்......

பாரதியைப் பின்பற்றிப் பாட்டெழுதிய பாரதிதாசன் சில இடங்களில் பாரதியை மிஞ்சிவிடுகின்றான். இசை அமைப்புக்கு பாரதிதாசன் கவிதைகள் மிகச்சிறந்தவை என்று நாதசுர மன்னர் டி. என். இராசரத்தினம் பிள்ளை வெகுவாகப் பாராட்டினர், அதேபோன்று சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையும் பாரதிதாசனிடம் சிறப்பாகக் காணப்பட்டது.

பாரதிதாசன் தந்த 'எதிர்பாராத முத்தத்தில்' ஒரு காவிய முத்தம் இதோ! பொன்முடியும், பூங்கோதையும் காதலர்கள்; ஆனால் பெற்றோர்கள் பகையால் பிரிக்கப்பட்டவர்கள் எனினும் பெற்றோர் பகை அவர்கள் அன்பினை பிளவு படுத்தவில்லை. நீண்ட நாட்களின் பின் பொன்முடி பூங்கோதையை கண்டான்; தாவி மெய்யிறுக அணைத்தான்...... சீ! கேவலம்— மானம் மரியாதை உண்டா உங்களுக்கு?" என்றாள் கேட்டாள் அம் மங்கை! இல்லை... என்று அவன் மார்பிலே புதையுண்டாள்! அத்தனை சுகம் கண்டாள்! அந்த அணைப்பிலே என்பதுதான் கவிஞர் சொல்ல வந்த செய்தி. "விடாதீர்" என்ற சொல்லிலே எத்தனை பொருள்! "..................அத்தான் நீர் மறந்தீர் என்று மெய்யாக நான் நினைத்தேன்" என்றாள். அன்னோன் வெடுக்கென்று தான் அணைத்தான். "விடாதீர்" என்றாள் கையிரண்டும் மெய்யிறுக, இதழ்நிலத்தில் கனஉதட்டை ஊன்றினான், விளைத்தான் முத்தம்!"

இது ஒரு முத்தம் — இதோ இதே போன்று இன்னோர் காவியமுத்தம் தருகிறேன். இச் சிறு காவியத்தின் இறுதியில் — அவர் — தனது வாழ்வின் இறுதியில் நடக்கும் ஒரு துயரக்கட்டம் இது. வடநாட்டிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த பொன்முடியை நடுவழியில் காதல்கிளியாம் பூங்கோதை சந்திக்கிறாள். இங்கும் முத்தம் பெறுகிறார்கள்; எதிர்பாராத முத்தம் தான் — ஆனால் அந்தோ! படுபாவிக்கொலைக்காரன் மரத்தின் மறைவிலிருந்து வாளால் கழுத்தை வெட்டித் துண்டிக்கிறான் — அதைக் கண்ட அவளும் உயிர் துறக்கிறாள் — சாவிலேயும் ஒன்றிச் சாந்தி காண்கிறது அவர்கள் உள்ளம்.

"நேர்க்தோடும் இருமுகம் நெருங்கும்போது நெடுமரத்தின் மறைவினின்று நீள்வாள் ஒன்று பாய்ந்தது மேல்! அவன் முகத்தை அணைத்தாள் தாவிப் பளீரென்று முத்தமொன்று பெற்றான்! சேயின் சாந்த முகத்தினைச் கண்டாள் உடலைக் காணான்! தலைகமந்த கையோடு தரையிற் சாய்ந்தாள் தீந்தமிழர் உயிர்வினுக்குச் செத்தான்! அன்டன் செத்ததற்குச் செத்தாள் அத் தென்னூட் டன்னம்!"

காதலனை இழந்த பூங்கோதை கற்பரசியாக அதே இடத்தில் அதிர்ச்சியால் மாண்டுபடுகிறாள். தமிழ் பெண்ணின் காதல் உள்ளத்தை, கற்பின் செழுமையை நீட்டிவிரித்து வருணிக்காமல் சுருக்கமாக உணர்ச்சிப் பெருக்கமாகக் கூறி முடித்தார் கவிஞர், "அன்பன் செத்ததற்குச் செத்தாள் அத்தென்னூட்டன்னம்"— இதிலே எத்தனை கருத்து.

இனிக் கவிஞரின் இன்னொரு கவிதையில் வரும் காதல்காட்சியைப் பார்ப்போம். தாய் வீட்டில் இல்லை; கூடத்தில் பாடம்படிக்கிறான் மகன். அண்டை வீட்டு இளமங்கை மாமியைத் தேடி வருகிறாள். மாமி இல்லை—அத்தான் தான் இருக்கிறான் — நடந்தது என்ன?

"கூடத்திலே மனப்பாடத்-
திலே விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப்
பார்வையினால் அவள்
உண்ணத்தலைப்படு
நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழி
தனிற் பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடை திருத்தி நின்றாள்
அவள்தான்
இவன் ஆயிரம் ஏடு
திருப்புகின்றான்."

அத்தானின் அழகைப் பருகியவாறே நின்றாள் அவள். பாடம் படித்தவன் நிமிர்ந்தான் — இவன் விழிகளில் மோதிய அவள் விழி நாணத்தால் தெறித்தது— தலைகுனிந்தது. அவனுக்கு எங்கே மேலும் பாடம்? எழுந்தான்— சென்றான் அவள் அருகே— அணைத்தான் — முத்தம் ஈந்தான். அப்போது தாய் வந்து கொண்டிருப்பதை உணர்ந்தான். அவளை விட்டுவிட்டு ஓடிச்சென்று புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டுகிறான் மேலும் கீழுமாக— மனம் பாடத்தில் ஒன்றவில்லை' அவளும் அணைப்பிலே கலைந்துவிட்ட ஆடையைச் சரிபார்த்து நின்றாள். "பட்டுத் தெறித்த மானின் விழி"யின் உள்ளத்து நிலையையும், "ஆடை திருத்தி நின்ற" வினைவையும் சொல்லாமலே சொல்லிவிட்டார் கவிஞர் இது கவிஞரின் தனித்திறமை என்றே சொல்லவேண்டும்,

சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் இத்தத் தனித்தன்மை பாரதிதாசனுக்கே சொந்தம் எனலாம்,

## "மாணவர்களுக்கு விளையாட்டும் அவசியம்"

உடுப்பிட்டி, செவ்வாய்

"தமிழினம் இப்போது விடிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, நம்மை மூடி மறைத்திருந்த இருள் படிப்படியாக விலகிக்கொண்டிருக்கிறது. தமிழ்க் குழந்தைகள் யாவும் உடற் பயிற்சியிலும் விளையாட்டுக்களிலும் சிறந்தவர்களாக விளங்கவேண்டும் தனிப்பட்ட கழகங்கள் நடாத்தும் இப்போட்டிகளினால் ஊரிலுள்ள சிறுவர்கள் போட்டி மனப்பான்மையுடன் முன்னேறுகின்றனர். பெற்றோர், பிள்ளைகள் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும் கல்வியும் ஒழுக்கமும் எவ்வளவு அத்தியாவசியமோ அதுபோல மாணவரின் உடல் வளர்ச்சிக்கும் உள்ள வளர்ச்சிக்கும் விளையாட்டும் அவசியம்" என்று வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் கலின்டில் நாவலன் விளையாட்டுக் கழகத்தினரின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளிலும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். விளையாட்டுப்போட்டியில் விநோத உடைப்போட்டி, தலையணைச்சண்டை, மைல் ஓட்டம் முதலிய ருசிகரமான விளையாட்டுக்கள் இடம்பெற்றன,

வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினார். நிகழ்ச்சிகளுக்கு திரு. க. ஜெயக்கொடி தலைமை வகித்தார்.

## நாடும் நடப்பும்

ஜோன்பாஸ் என்பவர் பிரபல அமெரிக்க பாடகி. நாட்டுப்பாடல்கள் பாடுவதில் பெரும் புகழ்பெற்றவர், அவர் தனது வருமானவரியில் 60சதவீதத்தொகையைச் செலுத்துவதற்கு இம்முறையும் மறுத்துவிட்டார், இதற்கு முந்திய இரண்டு வருடங்களிலும் அவர் இவ்விதம் மறுத்திருக்கிறார். வருமான வரியில் அறுபது சதவீதத்தை மட்டும் செலுத்துவதற்கு ஏன் மறுக்கிறார் தெரியுமா?

அவர் கொடுக்கும் வருமான வரியில் அறுபது சத விகிதத் தொகை ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படுவதாக செல்வி பாஸ் கணித்துள்ளார். அவருக்கு யுத்தத்தில் நம்பிக்கையில்லை. அது அவருக்குப் பிடிக்காது!

அமெரிக்க உள்நாட்டு வருமான வரி இலாகாவுக்கு செல்வி பாஸ் எழுதிய ஒரு கடிதத்தில், "யுத்ததளபாடங்கள் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரைக் கொலைசெய்திருக்கின்றன, உயிருடன் எரித்திருக்கின்றன, நாசம் செய்துள்ளன, ஊனமாக்கியிருக்கின்றன; இன்னும் தாங்கொணாத் துயரங்களை ஏற்படுத்தியிருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதனால் இந்த "அநாகரிக, காட்டுமிராண்டித்தனமான யுத்தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு தாம் பணம்செலுத்தப்போவதில்லை" என்று தெரிவித்துள்ளாராம்!

வல்லரசுநாடுகளிலுள்ளவர்கள் எல்லோரும் இதே வழியைப் பின்பற்றினால் படைக்குறைப்பு தானாகவே ஏற்பட்டுவிடலாம்!

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் கானமழை நியூயோர்க்கில் ஐ. நா. மகாசபையில் பொழியப்போகிறதாக ஒரு செய்தி கூறுகிறது. ஐ. நா. மகாசபையின் இருபதாவது வருடாந்தக்கூட்டம் செப்டம்பர் மாதம் ஆரம்பமாகும் போது அத்தினத்தில் எம். எஸ். ஸின் கச்சேரி நடைபெறுமாம். வெளிநாடுகளில் எம். எஸ் இன்னிசை விருந்தளிப்பது இதுதான் முதல்தடவையல்ல. 1963-ம் ஆண்டில் எடின்பரோவில் நடைபெற்ற சர்வதேச விழாவில் தனது இன்னிசையால் மேல்நாட்டவரைக் கவர்ந்தவர், ஐ. நா. சபையில் தமிழிசையும் முழங்கும் என்ற தமிழர் பூரிப்படையலாம்!

ஆறு கிரகங்கள் ஒன்றுசேருகின்றனவாம். எட்டுக் கிரகம் சேர்ந்து என்னென்னவோ செய்துவிட்டுப் போயிருக்கிறது; இனி ஆறு கிரகம் சேர்ந்து என்ன செய்யுமோ என்று அங்கலாய்க்கிறார் ஒருவர். ஆறுகிரக சேர்க்கையுடன்சூரிய கிரகணமும் வருகிறதாம்,

இலங்கையில் பெரும்மாற்றங்கள் ஏற்படலாமென்றும் 'அக்டோபர் புரட்சி' தோன்றக்கூடுமென்றும் ஒரு சோதிடர் பயமுறுத்துகிறார் அரசியல் தலைவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென்றும் அவர் பயமுறுத்துகிறார் எந்தக் கிரகங்களின் சேர்க்கையினால் வரும் ஆபத்தையும் ஆண்டவனை வணங்குவதன் மூலம் நீக்கிவிடலாம், அவனன்றி ஓரணுவும் அசையாது.

— ஊர்சுற்றி

# "தாக்குதலை நிறுத்தாவிட்டால் நவீன ஆயுதங்களைக் கொண்டு எதிர்ப்போம்"

## அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

### மண்டல சார்பற்ற யோசனையையும், ஐ. நா. மத்தியஸ்தத்தையும் வடவியட்னும் நிராகரித்தது

மாஸ்கோ, ஏப்ரல் 20

அமெரிக்கா வியட்னுமில் குண்டுவீச்சை நிறுத்தும்வரை, அங்கு அமைதியை ஏற்படுத்த முடியாதென்றும், ஜனாதிபதி ஜோன்ஸனின் யோசனை இந்தநிலையில் அர்த்தமற்றது என்றும் அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தாவிட்டால் ரஷ்யா வியட்னுமில் அமெரிக்கத் தாக்குதலை நவீன ஆயுதங்கள் கொண்டு எதிர்க்குமென்றும் ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் எச்சரிக்கைவிடுத்திருக்கிறார்.

ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கும் மங்கோலியப் பிரதமருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் பேசுகையிலேயே இவ்வாறு அமெரிக்காவை அவர் எச்சரித்தார்.

"அமெரிக்கா நடத்தும் குண்டுவீச்சு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும், இதற்கு அந்த நாடுகளே பொறுப்பு வகிக்க வேண்டும்" எனக்கூறிய ரஷ்யப்பிரதமர், வியட்னும் சம்பந்தமான திரு ஜோன்ஸனின் யோசனைகளை நிராகரித்தார்.

**நடுநிலை யோசனை நிராகரிப்பு**

அதேசமயம் வியட்னும் சம்பந்தமாக நிபந்தனையற்ற பேச்சுகள் நடைபெற வேண்டும் என்ற 17 மண்டலசார்பற்ற நாடுகளின் யோசனையை வடவியட்னும் நிராகரித்துவிட்டது. ஐ. நா. மத்தியஸ்தத்தையும் அது நிராகரித்துவிட்டது.

**ஹவாய் மகாநாடு**

ஹவாய்த் தலைநகர் ஹொனலுலுவில் வியட்னும் சம்பந்தமாக நடைபெறும் அமெரிக்க முப்படைத் தலைவர்கள், ராஜதந்திரிகள் ஆகியோரடங்கிய கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா அங்கு சென்றிருக்கிறார்.

**வாஷிங்டன் ஏமாற்றம்**

வியட்னும்பற்றி நிபந்தனையற்ற பேச்சுகள் நடைபெற வேண்டும் என்ற ஜனாதிபதி ஜோன்ஸனின் யோசனையை ரஷ்யாவும் வடவியட்னுமும் நிராகரித்திருப்பது வாஷிங்டனில் ஏமாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது.

**9 அமெரிக்கர் பலி**

தென்வியட்னுமிலுள்ள வியட்காங் இலக்குகளை அமெரிக்க ஜெட்விமானங்கள் நேற்றுத் தொடர்ந்து தாக்கின. இத்தாக்குதலின் விளைவாக 9 அமெரிக்கர் மாண்டதாகவும், 5 அமெரிக்கர் காயமடைந்ததாயும், 2 அமெரிக்க ஹெலிகோப்டர்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

வடவியட்னுமில் நடைபெற்ற தாக்குதலில் 7 அமெரிக்கவிமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும், மற்றும்பல விமானங்கள் சேதப்படுத்தப்பட்டதாயும் ஹனோய் செய்தி ஒன்று கூறுகிறது. இத்தாக்குதலில் அமெரிக்க விமானப்படை விமானங்களும், கடல் விமானங்களும் கலந்து கொண்டன. வடவியட்னுமில் பல முக்கிய இலக்குகள் சேதப்படுத்தப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

**புதுபலம்**

தென்வியட்னுமுக்கு அமெரிக்க நவீன ஜெட் அணி ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது. ரஷ்யமிக் விமானங்களை எதிர்க்கும் வேலையில் இவை ஈடுபடுத்தப்படும்.

**வாக்கர்-பூமா சந்திப்பு**

வியட்னும் சம்பந்தமாக உண்மை அறியும் சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ்தூதர் திரு. கோர்டன்வாக்கர் நேற்று வியன்டியனில் லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவைச் சந்தித்துப் பேசினார்.

**பிரான்ஸ்**

அடுத்து நடைபெறவிருக்கும் "ஸீட்டோ" மகாநாட்டில் பிரான்ஸ் ஒரு பார்வையாளராகக் கலந்து கொள்ளுமென்றும் மேற்கு நாடுகளின் வியட்னும் சம்பந்தமான கொள்கையைப் பிரான்ஸ் ஆதரிக்கவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## 29 கென்யா மாணவர்

### இப்போது யு. எஸ். செல்வர்

ஆக்ரா, ஏப், 20

ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்ட 29 கென்யா மாணவருக்கும் அமெரிக்காவில் கல்வி கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. மாஸ்கோவில் தாங்கள் கல்விகற்பதற்கு சர்வகலாசாலை ஒரு நிர்ப்பந்தமான கம்யூனிஸ்ட் முகாமாக இருந்ததாக இந்த மாணவர்களில் ஒருவர் கூறினார்.

### பிரிட்டன் மீது குற்றச்சாட்டு

ஏடன், ஏப், 20

ஏடனின் சுதந்திரத்தைத் தாமதப்படுத்துவதாக பிரிட்டன் மீது அங்காட்டின் முதல் மந்திரி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

### கிரேக்கர்கள் வெளியேற்றப்படுவர்

அங்காரா, ஏப், 20

துருக்கியிலுள்ள கிரேக்க பிரஜைகள் அனைவரும் நாடு கடத்தப்படுவார்கள் என துருக்கி உள்நாட்டு மந்திரி கூறினார்.

மந்திரிசபை கூட்டமொன்றுக்குப்பின் அவர் இத்தகவலை வெளியிட்டார். தற்போது துருக்கியில் 6000 கிரேக்கர்கள் இருக்கிறார்கள்.

### 'ரஷ்ய-பாக். உறவு விருத்தியடையும்'

—அயூப்

ராவல்பிண்டி, ஏப், 20

தமது ரஷ்ய விஜயத்தினால் பாகிஸ்தான்-ரஷ்ய உறவுகள் மேலும் நெருக்கமடையுமென ஜனாதிபதி அயூப்கான் கூறினார். தமது விஜயத்தின் போது ரஷ்யா காட்டிய அன்பு தம்மை வெகுவாகக் கவர்ந்ததென்றும் அவர் கூறினார்.

### சீன-ஜாப். தூதர் சந்திப்பு

ஜாகர்த்தா, ஏப், 20

ஜப்பானிய பிரதமர் திரு. ஸாட்டோவின் விசேஷ தூதர் சீனப்பிரதமர் சூ-என்-லாயை இங்கு சந்தித்துப் பேசினார். இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ணோவின் முன்னிலையில் இச்சந்திப்பு நடைபெற்றது- சீன-ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் உறவும் விருத்தியடையும் என நம்புவதால் இச்சந்திப்புக்குப்பின் ஜப்பா[illegible]

## "கட்சில் இந்தியாதான் ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கிறது"

### பாதுகாப்புச்சபைக்கு பாக். கடிதம்

நியூயோர்க், ஏப்ரல் 20

கட்ச் பகுதியில் ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பது இந்தியாவே என்றும், பாகிஸ்தான் அல்ல என்றும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

தகராறுக்கான இந்த எல்லைப்பகுதியில் இந்தியா திட்டமிட்டு கடந்த ஜனவரி மாதம் முதல் ஆக்கிரமிப்பு நடத்திவருவதாய் ஐ. நா.விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி இக்கடிதத்தில் கூறியிருக்கிறார்.

இந்தியா பிரிவினை செய்யப்பட்டது முதலே கஞ்சர்கோட் பாகிஸ்தான் நிர்வாகத்தில் இருந்து வந்தது என்றும், தன் உள்நாட்டுப் பிரச்னைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவே அது பாகிஸ்தான் மீது ஆக்கிரமிப்புக் குற்றம் சுமத்துகிறது என்றும் கடிதம் கூறுகிறது.

அஹமதாபாத்திலிருந்து இந்தியத் துருப்புகள் கட்ச் பகுதிக்கு அனுப்பப்பட்டதால் பாகிஸ்தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்பகுதியில் இந்திய ராணுவ, கடற்படை, விமானப்படை ஒத்திகைகள் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றன என்றும் இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

"பாகிஸ்தானை தனது முதலாவது விரோதி என இந்தியா அறிவித்திருக்கிறது, தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதே பாகிஸ்தானின் நோக்கம்" என்றும் பாகிஸ்தானின் கடிதம் கூறியிருக்கிறது.

## குஜராத்தில் 3500 சதுர மைல் பாகிஸ்தானுக்கு சொந்தமாம்

### வெளிமந்திரி பூட்டோ அறிவிப்பு

புதுடில்லி, ஏப் 20

கஞ்சர்கோட் விஷயமாக இந்தியாவின் சமரச யோசனைக்கு பாகிஸ்தான் செவிமடுக்காமலிருப்பதும், இந்திய விரோத பிரசாரத்திலீடுபட்டிருப்பதும் டில்லியில் அதிருப்தியைக் கிளப்பியிருக்கிறது.

கஞ்சர்கோட்டிலிருந்து பாகிஸ்தான் துருப்புக்கள் வாபஸ் பெறுவிட்டால், அதனால் விளையும் அனர்த்தங்களுக்கு பாகிஸ்தானே பொறுப்பு என இந்தியா மீண்டும் எச்சரித்திருக்கிறது. பாகிஸ்தான் இந்தியாவுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்கியிருக்கிறதென டில்லியில் கூறப்படுகிறது.

அதே சமயம் குஜராத் ராஜ்யத்திலுள்ள 3500 சதுர மைல் பிரதேசம் பாகிஸ்தானுக்குச் சொந்தம் என வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் கட்ச் பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பைத் தீரத்துடன் எதிர்த்து உயிர்விட்ட 6 எல்லைப் பொலிசாருக்கு ஞாபகச் சின்னம் அமைக்கப்பட்டுவருகிறது.

## டில்லி சீன தூதராலயம் பற்றி சாஸ்திரி புகார்

புதுடில்லி, ஏப் 20

புதுடில்லியிலுள்ள சீனத் தூதராலயத்தின் விரும்பத்தகாத நடவடிக்கைகளை எப்படிச் சமாளிப்பது என்பது குறித்து அரசாங்கம் ஆராயும் என பிரதம மந்திரி திரு சாஸ்திரி லோகசபையில் கூறினார்.

டில்லியிலுள்ள சீனத்தூதராலயம் சரியாகப் பணி புரியவில்லை என்பது உண்மைதான் என அவர் குறிப்பிட்டார்.

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் சீனத் தூதராலயத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என வெளிநாட்டு மந்திரி திரு சுவர்ணசிங் சபையில் அறிவித்தார்.

சீனத்தூதராலயம்பற்றிஎந்த நடவடிக்கையும் எடுக்கப்படுமுன் பலவிஷயங்களைப் [illegible] சீலிக்கவேண்டியிருப்பதாயும் [illegible] அவர் கூறினார்.

## 3-ம் டெஸ்ட்

### மேற்கிந்தீஸ் வெல்லும்?

ஜார்ஜ்டவுன், ஏப். 20

அவுஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்திய தீவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், மேற்கிந்தீஸ் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

ஸ்கோர் விபரம் வருமாறு:-

**மேற்கிந்தீஸ்**

முதல் இன்னிங்ஸ் 355 ரன்கள்,

2-ம் இன்னிங்ஸ் 180 ரன்கள்.

**அவுஸ்திரேலியா**

முதல் இன்னிங்ஸ் 179 [illegible] கள்,

[illegible] இன்னிங்ஸ் [illegible] விக்கெட்டுக்கு 144 ரன்கள்.

ஹிந்தி திணிப்பு

## "வடநாட்டாரே, மாமியார் போல் நச்சரிக்காதீர்"

—காமராஜ்

### "காமராஜ் சாமர்த்தியசாலி"

—ராஜாஜி

சென்னை, ஏப். 20

"வட இந்தியர்கள் தென்னக மக்களைப் பார்த்து "ஹிந்தி படியுங்கள்" என ஒரு மாமியாரைப்போல் நச்சரிப்பதை விட்டுவிடவேண்டும்" என காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் தெரிவித்தார்,

"வட இந்தியர்கள் இம்மாதிரி நிர்ப்பந்திப்பதைக் கண்டு தங்களுள்ளவர்களுக்கு ஒரு மருமகளுக்கு ஏற்படுகிற எரிச்சல் தான் ஏற்பட்டிருக்கிறது. நம்மை ஹிந்தி படிக்கச் செய்ய நாங்கள் யார்? இந்தியாவின் எல்லாப் பகுதிகளுடனும் தொடர்புகொள்ள ஹிந்தி படிப்பது அவசியம், நல்லதும் கூட, ஆனால் வடக்கேயுள்ளவர்கள் இதுபற்றி வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்" என்றும் காமராஜ் கூறினார்,

"தமிழுக்கு அதற்குரிய ஸ்தானத்தைக் கொடுத்தாகவேண்டும். இப்போது இல்லை என்றால் பின்னராவது அது போதனு மொழியாகவேண்டும். ஆனால் ஹிந்தி எதிர்ப்பாளர் பலர் விரும்புவது இதுவல்ல, ஆங்கிலமே கல்லூரி போதனு மொழியாக என்றென்றும் நீடித்துவரவேண்டும் என்பதுபோல் அவர்கள் பேசி வருகிறார்கள்" என்றும் காமராஜ் கூறினார்.

**ராஜாஜி**

"தமிழ்நாட்டு மக்களைத் திருப்தி செய்யும் பொருட்டே காமராஜ் இப்படிச் சொல்லியிருப்பார். மனப்பூர்வமாகக் கூறியிருக்கமாட்டார். இது அவருடைய சாமர்த்தியப் பேச்சு" என ராஜாஜி கூறினார்.

"எதிர்க்கட்சி அங்கத்தினர்களைப்போல காமராஜ கருத்துத் தெரிவித்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் அந்தரங்க சுத்தியுடன் அந்தக் கருத்துக்களை அவர் தெரிவித்திருக்க முடியுமா என்பது குறித்து சந்தேகப்படுகிறேன்" என்றும் ராஜாஜி கூறினார். "வடநாட்டவர்கள் காமராஜரின் கருத்தை உண் (4-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனதைக் கட்டுப்படுத்த அந்தர்யோகம் உதவுகிறது"

## சுவாமி சச்சிதானந்தா உரை

கண்டி, செவ்வாய்

"மனதை உள் முகமாகத் திருப்பி மனதைப் பயிற்சி செய்ய அந்தர்யோகம் உதவுகிறது. வாழ்க்கை முழுவதும் எப்படி சாதனை செய்யவேண்டுமென்பதற்கு இப்பயிற்சிகள் துணைபுரிகின்றன. வருடத்தில் ஒரு சில நாட்களுக்காவது இப்படியாக வெளியுலக தொடர்புகளை மறந்து சாதனைசெய்து வருதல் ஆத்மீக முன்னேற்றத்திற்கு சிறந்தவாய்ப்பாகும்".

இவ்வாறு யோகிராஜ் சச்சிதானந்தா கண்டியிலுள்ள சச்சிதானந்த தபோவனத்தில் மூன்று தினங்களுக்கான அந்தர் யோகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

பெருந்தொகையானோர் சாதனைகளில் கலந்துகொண்டனர். யோகாசனம், பிராணயாமம், மௌனம், பக்திப்பாடல்கள்; வழிபாடு, சந்தேகம் தெளிதல் முதலிய நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றன.

யோகிராஜ் சச்சிதானந்தா மேலும் கூறியதாவது:

நாளாந்த வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வகுத்துச் செயலாற்றவேண்டும். தொழில் நேரம்போக மிகுதியான நேரம் ஒழுங்கான வாழ்வு வாழ்கிறோமா? வாழ்க்கையில்வரும் இன்ப துன்பங்களுக்கு மனமே காரணம். மனம் சொன்னபடியே உடல் உறுப்புகள் தொழில் படுகின்றன. எனவே மனமே மனதைச் சதா கண்காணித்து வரவேண்டும். நல்ல மனக்கட்டுப்பாடு இருந்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழலாம். எவன் தன்னலமின்றி இருக்கிறானோ எல்லா நலன்களும் அவனைத்தேடிவருகிறது. சாதனைசெய்வதுதான் செயற்கரிய செயல், நாம் வயதிலே மட்டும் முன்னேறினால் போதாது, அறிவிலே முன்னேறவேண்டும். ஒவ்வொரு மூச்சும் முடிந்த பின் வாழ்வும் நின்றுவிடும், எனவே மூச்சு இருக்கும் போதே ஆன்ம லாபத்தைத் தேடவேண்டும்,

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

எண்ணங்களிலிருந்து விடுபடும்போது மனிதன் சுதந்திர புருஷன் ஆகிறான். ஒவ்வொருவர் மனமும் எந்தவளவில் பழக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் முன்னேற்றம் உண்டு. மனிதனின் எண்ணங்கள் உடலை மாற்றிவிடும் தன்மையுடையது. உலகில் தெவிட்டாத இன்பம் ஒன்று உளதாயின் அது தெய்வ நினைப்பே என்பதே பக்தர்கள் கண்ட அனுபவம். ஆத்மீக வாழ்க்கையில் முன்னேற விரும்பியவர்களுக்கு ஒருசிறு உபதேசமே போதுமானது.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம், டாக்டர் திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## "வடநாட்டாரே...:

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

மையானவை என நம்புவார்கள். காமராஜரின் தந்திரத்தைத் தெரிந்துகொள்ளாமல் அவர்கள் அவரைக் குறைகூற ஆரம்பிப்பார்கள். அந்த நிலைமையில் வடநாட்டவர்களுக்குச் சமாதானம் கூற காமராஜ் மற்றோர் உபாயத்தைக் கையாளவேண்டியிருக்கும்" என்றும் ராஜாஜி தெரிவித்தார்.

ஹிந்தியை ஆட்சி மொழியாக்கினால் பிராந்திய மொழிகள் சீரழிந்துவிடும் என்றும், ஆங்கிலம் ஒன்றுதான் பிராந்திய மொழிகள் ஜீவிப்பதற்கு உதவி புரியமுடியும் என்றும் ராஜாஜி தொடர்ந்து கூறினர்.

## கிணற்றில் விழுந்து கர்ப்பிணி தற்கொலை

ஊர்காவற்றுறை, செவ்

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் பிரசவத்திற்காகச் சென்றிருந்த நிறைமாதக் கர்ப்பிணி யாரும் காணாத வேளையில் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி அயலில் உள்ள கிணற்றில் விழுந்து தற்கொலையுண்ட பரிதாப சம்பவம் ஒன்று நாரந்தனையில் நடைபெற்றுள்ளது.

நாரந்தனையில் வசிப்பவரான மட்டத்தீனின் மனைவி ஜோர்த்தம்மா (வயது 27) என்பவரே தற்கொலைசெய்து கொண்ட கர்ப்பிணியாவார். இவர் வருடப்பிறப்பன்று இரவு ஆஸ்பத்திரியில் இருந்து காணாமற்போய்விட்டார். பிரசவ தாய் பெண்ணை தேடிப்பிடிப்பதில் பலர் ஈடுபட்டனர். 15-ந் திகதி மாலை நரம்பன் குழ்ப்பிடித் தாழ்வு காணியில் உள்ள கிணற்றில் இப் பெண்ணின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம்பற்றி வேலணைத் தீவு மரணவிசாரணை அதிகாரி திரு எஸ. மகாலிங்கம் ஸ்தலத்தில் சென்ற வெள்ளிக்கிழமை காலையில் விசாரணை நடாத்தினர்.

பிரேதபரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி திரு. சிவஞானசுந்தரம் சாட்சியளிக்கையில் நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்தது என்றும், காயம் எதுவும் இல்லை எனவும் அசம்பாவிதம் எதுவும் நடைபெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

தனது மனைவியை ஆஸ்பத்திரியில் அனுமதித்த காலை வதுகான் போய்ப்பார்த்ததாகவும் தனது மனைவிக்கு மனத்துன்பம் காணப்பட்டது என்றும் வருத்தம் காரணமாகத் தற்கொலைசெய்து இருப்பார் என்று தான் அபிப்பிராயப்படுவதாகவும் மட்டத்தீன் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார். ஊர்காவற்றுறை தற்காலிக டி. எம். ஓ. திரு. ஏபிரகாம் சாட்சியமளிக்கையில் இறந்தவர் மனக்கலவரம் அடைந்திருந்தார் எனவும் அதற்குத் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டது எனவும் கூறினர்.

நீண்டநேரவிசாரணையின்பின் வருத்தத்தினால் அல்லது திடீர் மூளைத்தடுமாற்றத்தினால் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறிகிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி தற்கொலையுண்டார் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்புக் கூறினர்.

## தப்பி ஓடினான்

ஜம்மு, ஏப். 20

செய்ரான் கொலைவழக்கில் 4 எதிரிகளில் ஒருவரான நஜார்சிங்பவுஜி மீண்டும் பொலிசுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பி ஓடினான். பொலிஸ் கோஷ்டி துரத்திச் சென்ற போது பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பஞ்சாப் கிராமத்தில் ஒரு வீட்டிற்குள் புகுந்தான். வீட்டை பொலிசார் சோதனை இடுகையில் பின்பக்கமாக ஓடிவிட்டான்.

# பஞ்சாப் முதல்வர் மீது பாக். துருப்புக்கள் சுட்டன

## அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்

ஜம்மு, ஏப். 20

பஞ்சாப் முதன்மந்திரி திரு. ராம்கிஷன் எல்லைப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது போர்நிறுத்தக்கோட்டின் மறுபக்கத்திலிருந்து பாகிஸ்தான் துருப்புக்கள் சுட்டன. சாம்ப் பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக அவர் உயிர்தப்பினர்.

எனினும் முதல்மந்திரியின் கோஷ்டியில் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டதால் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பாகிஸ்தான் துருப்புக்களின் குண்டுகள் ஒரு ஜீப்பில் பாய்ந்தன.

முதல்மந்திரி அறிவித்ததாவது:-

"ஜவான்கள் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்த போது 600 யார் தூரத்தில் இருந்து பாகிஸ்தான் துருப்புக்கள் எங்களை நோக்கிச் சுட்டன. உடனடியாக என்னை அருகிலுள்ள சிறு அரணுக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கிருந்து நானும் எனது கோஷ்டியினரும் புறப்பட்ட போது மீண்டும் எங்களை நோக்கிச் சுட்டனர். திடீரென நாங்கள் குண்டு மழைக்கு இலக்காகிவிட்டோம்."

முதல்மந்திரி மீது பாகிஸ்தானியர் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியதாக அவருடன் சென்ற உதவிபொலிஸ இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறினார்.

பாகிஸ்தானியர் நடுத்தர இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதாயும், ஆனால் முதன்மந்திரி சிறிதும் கலங்கவில்லை என்றும் அவர் கூறினர்.

பாகிஸ்தான் துருப்புகள் சுட ஆரம்பித்ததும் இந்தியத் துருப்புக்கள் பதிலுக்குச் சுட ஆயத்தமானார்கள்.

முதல்சம்பவத்திற்குப் பிறகு முதல்மந்திரி ராம்கிஷன் மற்றொரிடத்திற்குச்சென்று துருப்புக்களிடம் பேசலானர். அப்போது மீண்டும் அவர்களை நோக்கி பாகிஸ்தான துருப்புக்கள் சுட்டன. அரைமணி நேரம் இருதரப்பாரும் பரஸ்பரம் சுட்டுக்கொண்டனர். முதன்மந்திரி அப்போது பாதுகாப்பு அரணுக்குச் சென்றார். எல்லையில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு ஜலந்தருக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது, அவரது கார் மீது ஒரு ராணுவ டிரக் மோதிவிட்டது. கார் சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## ஆயுதங்களுடன் நுழைய முயற்சி

புதுடில்லி, ஏப் 19

பாகிஸ்தான் சென்ற நாகர்கள் ஆயுதங்களுடன் மீண்டும் நாகாலந்தில் நுழைய முயல்வது நடைமுறை ஒப்பந்தத்தை மீறிய செயல் என்றும் அவர்களது நடமாட்டத்தை அரசாங்கம் அறியும் என்றும், அவர்கள் தடுக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்,

## ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, ஏப் 19

லண்டனிலிருந்து புதுடில்லி திரும்பிய டாக்டர் ராதாகிருஷ்ணன் ராஷ்டிரபதியின் கடமைப் பொறுப்புகளை இன்று மீண்டும் ஏற்றுக் கொண்டார்,

## எம். பி. நடவடிக்கை

கிளிநொச்சி, செவ்வாய்

பூநகரிப் பகுதியில் கடல் நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட நெற்காணிகளின் சொந்தக்காரர்களுக்கு நியாயமான நஷ்டஈடு கொடுக்கவும் அக்காணிகளைத் திருத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அறிவிக்குமாறும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுத் தலைவரும் அரசாங்க அதிபருமான திரு. நெவில் ஜெயவீராவிற்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

## உதவிக்குச் சென்றவர் உயிர்நீத்தார்

சுழிபுரம், செவ்வாய்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் தீர்த்தக் கேணியில் நீராடிக்கொண்டு நின்ற ஒருவர் தவறுதலாக ஆழமான இடத்துக்குச்சென்றதால் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டு அவதியுற்றதைக் கண்ட அதே இடத்தைச்சேர்ந்த செல்லையா இராசதுரை நீரில் தத்தளித்தவரை காப்பாற்றுவதற்கு கேணியில் இறங்கினர். இராசதுரை கேணியில் இறங்கியதும் தத்தளித்தவரை பிடிப்பதற்கு முயன்றபோது அவரும் அவ்வாழமான இடத்தில் கஷ்டப்படவேண்டி ஏற்பட்டதுடன் தனது உயிரையும் துறக்கவேண்டிநேரிட்டது. இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்தது. கஷ்டப்பட்டவர் உயிர் தப்பினர். உதவிக்குச் சென்றவர் உயிர்நீத்தார்.




அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
★ 8 சர்வதேசபரிசுகளைச் சுவீகரித்தது.
★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜூபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்

METASYSTOX DIPTEREX

மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிச்சையப்பாவுக்கு வரவேற்பு

குடத்தை, ஏப். 20

இந்தியப் பிரதம மந்திரியால் டில்லியில் கௌரவிக்கப்பட்ட நாதஸ்வர வித்துவான் சுழிபுரம் பிச்சையப்பா டில்லியிலிருந்து திரும்பியபோது, அவருக்கு ரயில்வே நிலையத்தில் சங்கீத அபிமானிகளாலும், நகரமக்களாலும் தக்கமுறையில் வரவேற்பளிக்கப்பட்டது. ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன.

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 21-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-10 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைப்பட இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இசை ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு — டி. எஸ். மணிபாகவதர், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

REGAL — JAFFNA
NOW SHOWING
Kip Behar—Judy Miller
in
BEAUTY and the BODY
(Eastmancolor)

## ரஸிக ரஞ்சன சபா இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் ஆதரவில் யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையில் நடைபெறும் மூன்றும் நாள இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:


மாலை 5-30—5-45 ரஸிகரஞ்சனசபா சங்கீதக்கல்லூரி முதலாம் பகுதி மாணவர் — பாட்டு, 5-45 — 6-10 யா. ர. ர. ச. சங்கீதகல்லூரி 4-ம் பகுதி மாணவர்கள் — பாட்டு, 6-10 — 6-30 செல்விகள் வனிதாமணி சதாசிவம், தவரஞ்சினி சின்னத்துரை, ஜெபராணி இராசலிங்கம் — பாட்டு, 6-30 — 7-15 திரு சி. சதாசிவம் — பாட்டு, 7-15 — 8-15 செல்வி ஞானம் பிகை முருகேசு — தனிவயலின், 8-15 — 8-30 உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. சி. மாணிக்கவாசகர் — தலைமையுரை, 8-30 — 9-45 டாக்டர் சி. கெங்காதரன் — வேணுகானம், 9-45 — 11-00 திரு. சி. எஸ். எஸ். மணிஐயர் — சங்கீத கதாப்பிரசங்கம் — "இசை வாது வென்ற இறைவி".

## பாக். ஊடுருவல் நிறுத்தப்பட்டது

கல்கத்தா, ஏப். 20

மேற்கு வங்க எல்லையில் ஊடுருவல் செய்த 400 ஆயுதம் தாங்கிய பாகிஸ்தானிகளின் முயற்சி, உரிய தருணத்தில் எல்லைப் பொலிசார் அனுப்பப்பட்டதன் மூலம் முறியடிக்கப்பட்டது. இப்பகுதியில் இந்தியத்தரப்பின் பலம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
லிஜிதா (ஹட்டன்) தீவோலி (நுவரேலியா) ஜூப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

## வாலிப முன்னணி புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்வாய்

சில்லாலையில் புதிய தமிழரசு வாலிப முன்னணிக்கிளையொன்று வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. திரு. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வாலிபர்கள் பலர் கலந்து கொண்டனர். திரு. அமிர்தலிங்கம் கட்சியின் கொள்கைகளையும் வாலிப முன்னணியின் முக்கிய சேவைகளையும் எடுத்து விளக்கினார்.

பின்னர் நடைபெற்ற புதிய உத்தியோகஸ்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: பெ. ஜோண்பிள்ளை, உபதலைவர்: ச. இமானுவேல், காரியதரிசி: அ. வேதநாயகம், தனாதிகாரி: கு. மரியநாயகம், உபதனாதிகாரி: கி. யோ. மரியநாயகம், நிர்வாக சபை உறுப்பினர்கள்: ரெ. க. இன்னாசித்தம்பி, அ. மேரியோசப், ஞா. இமானுவேல், ப. மரியதாஸ.

## இராவணனுக்கு முன்பே இசை இருந்தது

### இசை விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

இராவணன் காலத்துக்கு முன்தொட்டே தமிழிசைக்குத் தனிச்சிறப்பும் பெருமையும் இருந்துவருகிறதென்று யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் முதல்நாள் இசைவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய வழக்கறிஞர் தா முத்துச்சாமிப்பிள்ளை கூறினார்.

யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையில் நடைபெறும் இவ் இசைவிழாவில் அவர் மேலும் சொன்னதாவது.

நோய்க்காக மருந்து கொடுக்கப்படுகிறது போல காதுக்கு மருந்தாக இசை அமைகிறது. ஒருமுறை இராவண மன்னன் கயிலைமலையை ஆகாயமார்க்கமாகச் சென்று தூக்கிச்செல்ல முயன்றபோது சிவபெருமானின் சின்னிவிரலால் கயிலைமலைக்குள் நசுக்குண்டு அவஸ்தைப்பட்டான். அப்போது இராவணன் தனது இசையின் திறமையால் சிவனைக் கவர்ந்து அங்கிருந்து மீட்சிபெற்றான். இப்படி இசையின் சிறப்புக்குப் பல சான்றுகளுள.

இவ் இன்னிசை விழாவின் நோக்கம் மக்களுக்கு இக்கல்லூரியில் பயின்ற மாணவ மாணவிகளின் இசைத்திறனைக் காட்டுவதே இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடைவதற்கு பொதுமக்கள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்.

## கார் மோதி ஸ்தலத்தில் மரணம்

சாவகச்சேரி, செவ்வாய்

நேற்றிரவு கடும் மழையில் ஆலையிறவைச் சேர்ந்த மீன் வியாபாரியும் ஒன்பது பிள்ளைகளின் தகப்பனுமான மாதர் சின்னத்துரை (வயது 50) என்பவர் இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்குமிடையில் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் கார் ஒன்றினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார். ஸ்தலத்தைவிட்டு மறைந்த, சம்பந்தப்பட்ட காரை பளைப் பொலிசார் பழுதுபட்ட நிலையில் பூநகரியில் வைத்து கைப்பற்றினர். கார் சாரதி கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்.

## வாஷிங்டனில் இத்தாலிய பிரதமர்

வாஷிங்டன், ஏப். 20

இத்தாலியப் பிரதம மந்திரி ...

## நாவற்குழி கிராமசபை கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 'சீல்' வைத்த கேள்விகள் 1965-ம் ஆண்டு வைகாசிமாதம் 5-ம் திகதி காலை 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அந்தந்த வேலைகளுக்கு நேரே காட்டப்பட்டுள்ள விகிதப்படி கந்தோரில் பணம்கட்டி 3-5-65-ம் திகதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/- கட்டவேண்டும் இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. வேண்டிய விபரங்களை வேலைநேரங்களில் கிராம சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகள்

1. கீரைவாய்க்கால் மணற்காடு ஒழுங்கை-அடைப்பற்று கட்டுப்பணம் ரூபா 100/-
2. கன்னித்திடல் கிணறு- கைதடி நாவற்குழி கட்டுப் பணம் ரூபா 10/-

க. தம்பிப்பிள்ளை,
அக்கிராசனர்,
கிராமசபை, நாவற்குழி.
கிராமசபை அலுவலகம்,
தச்சன்தோப்பு, கைதடி
19-4-65 189

## அறிவித்தல்

### இயக்கச்சி

### கொற்றாண்டார் குளம் வரதவிநாயகர் கோயில்

எதிர்வரும் 21-4-65 புதன் கிழமை பகல் சங்காபிஷேகமும் இரவு விசேஷ மேளக் கச்சேரி சகிதம் அலங்கார உற்சவமும் நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம். 185

## தேவை

நாவற்குழி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 26-4-65 பகல் 12-00 மணிக்குள் உடனடியாக பிணைகட்டக்கூடியவர்களிடமிருந்து சமீபத்தில் பெற்ற இருநற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மனேஜர்:-
   சம்பளம்: 90-140 / 5 X 10.
   தகைமை: எஸ். எஸ். சி.
   பிணை: ரொக்கம் ரூபா 1000/-
   ஆதனம் ரூபா 2000/-
   வயது; 30—40
2. விற்பனையாளர்:
   சம்பளம்: 50—60 / 2X5.
   தகைமை ஐந்தாம் வகுப்பு;
   பிணை: ரூபா 200/-
   வயது: 20—40.

முக்கிய குறிப்பு: கூட்டுறவுப் பயிற்சி பெற்றவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

காரியதரிசி.

140

## வீதியும் பஸ்ஸும்

கிளிநொச்சி, செவ்வாய்

வருடக்கணக்காகப் பழுது பார்க்கப்படாமல் இருக்கும் நீர்ப்பாசனப் பகுதியினருக்கு உரிய உருத்திரபுரம்வீதி வாகனங்கள் ஓடமுடியாத அளவுக்கு வீதி பழுதடைந்திருப்பதால் இ-போ.சபையினர் நடைமுறையில் இருந்துவரும் பஸ் சேவையை நிறுத்துவதற்கு எத்தனித்தனர். கிளிநொச்சி நீர்ப்பாசனப்பகுதி என்ஜினியர் திரு. எல். ஜெயசிங்கம் ஒரு மாதகாலத்துக்குள் செப்பனிட்டுத் தருவதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் பஸ் சேவை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

## அறிவித்தல்

11வது ஆண்டு நிறைவு விழாவையும், தமிழ், சிங்கள புதுவருடத்தையும் முன்னிட்டு மிகப் பிரசித்தி பெற்ற சன்ஞாக்ஸ் பிறில்ஸ 25-4-65 வரை அரைச்சலார். 181

## வரி விளம்பரம்

எங்கள் நகைகளில் நெசவு செய்த கைத்தறி சேலைகளைமிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும்; தங்கள் சரீரங்களுக்கு மிகவும் உயர்ந்த முறையில் சாதிகளுக்கேற்ப பொருத்தமான கலர்களில் (செலக்ட்) குஞ்சம் இணைக்கவும்; உடுப்புகள் உரிய முறையில் சிறந்த டிசைன்களில் தைத்து உடனுக்குடன் கொடுக்கவும் நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

அன்னம்ஸ் சாரி வேக்ஸ், 27, மின்சார நிலைய வீதி,(விக்னேஸ்வரா மேல் மாடி) யாழ்ப்பாணம்.

கிளை: அன்னம்ஸ் சாரி வேக்ஸ் இன்டன்றீஸ, கோவில் வீதி, கொக்குவில். 68

### தேவை

தகுதி வாய்ந்த பிணைப்பணம் ரூபா 1000/- கட்டக்கூடிய விகிதரும், வான் விற்பனையாளரும் தேவை. அத்தாட்சிப்பத்திரங்களுடன் 21-4-65 புதன் கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். தங்கா கெமிக்கல் இன்டஸ்றீஸ, (நுணுவில சந்தியடி) சாவகச்சேரி, 57

கைத்தறி நெசவு ஆசிரியை: நெசவுப் பயிற்சித் தராதரப் பத்திரமும் ஐந்து வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். கைத்தறி நெசவாளர் இப்பதவிக்குப் பெண்களும் ஆண்களும் விண்ணப்பிக்கலாம் இருவருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்களுக்குத் தங்குவதற்கு இடவசதியுண்டு. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு 29-4-65 தேதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும். வே. செல்லையா, அப்பிலான், கோப்பாய்வடக்கு,கோப்பாய். 65

### விற்பனைக்கு

22 ஸ்ரீ 8481 B M C ஒன் டின் டீசல் லொறி சொந்தப் பாவிப்பில் உள்ளது விற்பனைக்கு இருக்கிறது. வவனியா கல்ராக்ஸ் பெற்றோல் செட்டில் அல்லது கண்டி வீதியிலுள்ள மில்லில் பார்வையிடலாம். 99

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் பண்ணை நோயாளர் நிலையத்தில் கடமையாற்றும் திரு. எஸ். எஸ். கந்தையா என்பவரின் தகப்பனரான திரு சின்னத்தம்பசுந்தரம் என்பவர் 19-4-65 திங்கட்கிழமையன்று காலமாகி விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-4-65 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி செம்பாடு மயானத்தில் நடைபெற்றன.

## திடீர் மாற்றம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களங்களில் நடைபெற்ற நிர்வாக ஊழல்களை நிவிர்த்தி செய்து சிறந்த நிர்வாகத்தை நடத்தும் வண்ணம் போக்குவரத்து மந்திரி தனது நிரந்தரக் காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளார். பிரதானமாக 'ஏயர்சிலோன்' புகையிரதப் பகுதிகளில் உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்றும் மந்திரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தமிழரசு - யு. என். பி. ஒப்பந்தம் என்ன? பார்லிமெண்டில் கெனமன், எஸ். ஜே. வி. வாக்குவாதம்

## ‘இரகசியம்’ ஒருநாள் அம்பலத்துக்கு வந்தே ஆகவேண்டும்”

தமிழரசுக் கட்சிக்கும், யு. என். பி.க்குமிடையே ஏற்பட்டுள்ளஒப்பந்தம் என்னவென்பதைத்தாம் அறியவிரும்புவதாக கொழும்பு மத்தியதொகுதி மூன்றாவது எம்.பி.யும், கம்யூனிஸ்ட்கட்சித் தலைவருமான திரு. பீட்டர் கெனமன் இன்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. பீட்டர் கெனமன் மேலும் பேசுகையில் கூறியதாவது:



கெனமன்

“வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வாக்காளரிடம் தமிழரசுக் கட்சி, தான் யு என், பி அரசாங்கம் அமைக்க உதவுமென்றும் தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கவரிசையில் அமருமென்றும் கூறியிருந்ததா? என நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.”

இந்தச் சமயத்தில், அவர் தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிக் குறிப்பிட்டு என்ன அடிப்படையில் யு. என். பி.-தமிழரசுக்கட்சி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனத் தமக்குத் தெரியவில்லையெனக் கூறினார்.

திரு. கெனமன் தொடர்ந்து பேசுகையில் தேசிய அரசாங்கத்தில் மந்திரிப்பதவி ஏற்றுள்ள திருவாளர்கள் பிலிப் குணவர்த்தன, சி. பி. டி. சில்வா போன்ற பிற்போக்குவாதிகள் சிறிமாவோ அரசாங்கத்திலிருக்கும்வரை தாம் சிறிமாவுடன் எந்தவித தொடர்பான விஷயங்களையும் வைத்துக்கொள்ள முடியாதெனச் சென்ற வருடம் சிறிமாவுக்குத் தெரிவித்திருந்தாரென சுட்டிக்காட்டினார்.

### செல்வாவும் கெனமனும்



எஸ். ஜே. வி.

யு. என். பி.க்கும் தமிழரசுக கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், பண்டா—செல்வா ஒப்பந்தம் போன்றதா என திரு. பீட்டர்கெனமன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் கேள்வி கேட்டபோது திரு. செல்வநாயகம் “இந்த ஒப்பந்தம் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் போன்றதென்பது தவறானது” என்றார்.

திரு. கெனமன் பின்னர் பேசுகையில் யு. என். பி.க்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் சிங்கள, தமிழ் உயர்வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்கவேயென்றும், அரசாங்கம் பார்லிமெண்டில் பதில் கூறமறுத்தாலும் விரைவில் தமது ஆதரவாளர்களுக்கு விபரத்தைத் தெரிவிக்கவேண்டி நேரிடுமென்றும் கூறினார்.

ஆரம்பத்தில் திரு. பீட்டர் கெனமன் பேசியபோது தேசிய அரசாங்கம் உருவாக்குவதற்கு அரசாங்கம் மக்களின் சம்மதத்தைப்பெறவில்லையென்றும், தமிழ்க்காங்கிரஸ், யு. என். பி. அரசாங்கத்துடன் சேரப் பகிரங்கமாக மக்களின் அனுமதியைப் பெறவில்லையென்றும் குறிப்பிட்டார். இந்தச் சமயத்தில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் குறுக்கிட்டு யு. என். பி.யை ஆதரிப்போமென நாம் முன்பு மக்களிடம் கூறியிருந்தோமெனச் சுட்டிக்காட்டினார், அப்போது திரு. கெனமன் அப்படிக் கூறியிருந்தால் தாம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்து, இது தமிழரசக்கட்சியினர் நடந்துகொண்ட மாதிரியல்லவென்று குறிப்பிட்டார். திரு ஜி ஜி தமிழரசுக் கட்சி போலல்லாது நிலைமையைப் பொறுத்திருந்து அவதானித்துக்கொண்டிருப்பதை விரும்பியுள்ளாரென்றும் திரு. கெனமன் கூறினார்,

தேசிய அரசாங்கத்துக்கு நாட்டு மக்களிடம் சென்று அங்கீகாரம் பெறுவாராவென தாம் பிரதமருக்குச் சவால் விட விரும்புவதாக திரு. கெனமன் பிரஸ்தாபித்தபோது எதிர்க்கட்சியினர் மகிழ்ச்சி ஆரவாரம்செய்தனர். அரசாங்கக்கட்சியைச் சேர்ந்தவர்களும் இவ்விதம் ஆரவாரம் செய்தனர்,

இந்தச் சந்தர்ப்பத்தில் மந்திரி திரு. இரியகொலைக்கும், டாக்டர் என். எம். பெரேராவுக்குமிடையில் வாக்குவாதமேற்பட்டது.

டாக்டர் என். எம்.: உங்களுக்கும் தமிழரசுக்கட்சியினருக்குமிடையில் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா?

இரியகொலை: என்ன ஒப்பந்தம்? அப்படியேதுப் இருந்தால் அது உரிய காலத்தில் வெளியிடப்படும்.

திரு. பீட்டர்கெனமன்: முன்னர் பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது அது வெளியிடப்பட்டது. இப்போதும் தேசிய அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் என்ன அடிப்படையில் ஏற்பட்டுள்ளதென்பது பற்றி அறிய நாம் விரும்புகிறோம். உண்மையில் இதனை ஒரு தனிப்பட்ட ஒப்பந்தமாகக் கணிக்குமாறு எம்மைப் பிரதமர் எதிர்பார்க்கமாட்டாரென நம்புகிறோம். தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுவிட்டதாகத் தமிழரசுக்கட்சி தெரிவித்துள்ளது இதுவிஷயத்தில் தமிழரசுக்கட்சி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

## சபையில் நடந்தது

நமது நிருபர்

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதம் ஆரம்பமானபோது யு. என். பி.க்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் என்ன என்பதே எதிர்க்கட்சியினரின் கேள்வியாக இருந்தது. திரு. பீட்டர் கெனமன் விவாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில் இதனையே முதலில் கேட்டார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது பல குறுக்கீடுகளும் இடம்பெற்றன.

•

அரசாங்கக் கட்சியினர் அமர்ந்திருந்த பகுதியின் முதல் வரிசையில் ஒருகரையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் மற்றக் கரையில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி பொன்னம்பலமும் அமர்ந்திருந்தனர். இந்த வரிசையின் மத்தியில் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவும் நிதி மந்திரி திரு. வன்னிநாயக்காவும் அமர்ந்திருந்தனர்.

•

பாதுகாப்புப் படை மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களில் உயர்பதவி மாற்றம் ஏற்படவிருப்பதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியில் உண்மை இருக்கிறதாவென பட்டிருப்பு எம். பி. எஸ். எம். இராசமாணிக்கம் ஒரு கேள்வியைக் கேட்டபோது பிரதமர் டட்லி சேனநாயக்கா இதில் எதுவித உண்மையுமில்லையெனவும் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவித்தார். அப்போது எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. ஸ்டான்லி திலகரத்ன இதுவிஷயத்தில் தமிழரசுக்கட்சி அங்கத்தவர் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறாரெனக் குறிப்பிட்டார். மற்ற எம். பி.க்கள் கேட்கக்கூடிய எந்தக் கேள்வியையும் கேட்கும் உரிமை தமிழரசுக் கட்சி அங்கத்தவருக்கும் இருக்கிறதென்று பதிலளித்தார் பிரதமர் டட்லி.

•

இன்று நடைபெற்ற காரசாரமான விவாதத்தில் அமைதியைப் பாதுகாப்பதற்காகச் சபாநாயகர் தமது அதிகாரத்தைப் பலமுறை உபயோகப்படுத்த நேரிட்டது.





கொழும்பு, செவ்

பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா, முன்னாள் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா ஆகியோருக்கெதிராக தேர்தல் ஆட்சேபனை வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றன

இதுவரை மொத்தம் 37 பேரின் தேர்தலை ஆட்சேபித்து மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றன.

# டட்லி, சிறிமாவுக்கும் தேர்தல் ஆட்சேபனை தாக்கல்

நேற்றுத்தான் இதற்கான கடைசித் தினமாகும்.

அத்தனகலையில் ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் தெரிவை எதிர்த்து திரு ஜி ஏ சேகரா, திரு ஆர் ஏ ஜயரத்ன ஆகியோர் ஆட்சேபனை மனுதாக்கல் செய்துள்ளனர்.

டெடிகமையில் பிரதமர் டட்லியின் தெரிவை எதிர்த்து மனுத்தாக்கல் செய்திருப்பவர் திரு எஸ ரோஸியேல்,

குமார ராஜரத்ன (வெலிமடை), டி பி திலகரத்ன (ரத்கம), எம் எம் முஸ்தபா (நிந்தவூர்), வி பி ஜே செனவிரத்ன (மஹியங்கனை) ஆகியோரின் தெரிவை எதிர்த்தும் தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# இனத் துவேஷத்தைக் கிளப்பிவிட முயற்சியா?

## எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்மீது டட்லி குற்றச்சாட்டு

கொழும்பு, திங்கள்

இன்று காலை கூடிய அரசாங்க பாராளுமன்றக் குழு கூட்டத்தில் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா பேசியபோது எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இனத்துவேஷத்தைக் கிளறி விடப்பார்க்கிறார்கள் என்று கூறினர்.

அரசகருமமொழிச் சட்டம், தமிழ்மொழி ஆகிய விஷயங்கள் சென்ற ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டது போலவே இப்போதும் இருக்கிறது எனக் குறிப்பிட்டார்,

தற்காலிகமாகச் செய்யப்பட்டிருக்கும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை இறுதியாக்க அரசாங்கம் முயலும் என்றும், அதை நசுக்கும் உத்தேசம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் டட்லி கூறினர்.

எந்த நாடு பிழைசெய்தாலும் அதைச் சுட்டிக்காட்டி, எந்தக் கோஷ்டியுடனும் சார்ந்திருக்காமல் இருப்பதே அரசாங்கத்தின் உண்மையான நடுநிலைமைக் கொள்கை என்றும் அவர் கூறினர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சூறாவளி சேதம்பற்றி விசாரித்தறிய மந்திரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என இன்றைய கூட்டத்தில் வடக்கு, கிழக்கு எம. பி.க்கள் கூட்டத்தில் கேட்டுக் கொண்டனர்.

கொழும்பு, செவ்

நேற்று பார்லிமெண்டில் மொத்தம் 10 திருத்தப்பிரேரணைகளில் 7 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இன்னும் 3 இன்று பிரேரிக்கப்படும்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதம்பற்றிய வாக்கெடுப்பு வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறும்,

### யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

1965 மே மாதத்தில் கீழ்க்காணும் வகுப்புகளில் மாணவர் சேர்க்கப்படுவர்.

1. க. பொ. த. ப. வகுப்பு உயர்நிலை.
   கலை, விஞ்ஞானப் பகுதிகளில் 1965, 1966-ஆம் ஆண்டுகளில் நடக்கும் பரீட்சைகளுக்கு.
2. பொதுக்கலைத் தகுதிகாண் பரீட்சை,
   பொது விஞ்ஞான தகுதிகாண் பரீட்சை
   பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான மாலை வகுப்புகள்.

23-4-65 தொடக்கம் 7-5-65 வரை, அலுவலகத்திலிருந்து, விண்ணப்பப் பத்திரமும் கல்லூரி விபரப்பிரசுரமும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்புவது 7-5-65 உடன்முடிவடையும்.

பதிவாளர்,
வட்டுக்கோட்டை. 128

### மரண அறிவித்தல்

**அன்னம்மா — யோசெப்**

திரு. மனுவல் யோசெப் விசுவாசம் (கட்டட ஒப்பந்தகாரர்) அவர்களின் அருமை மனைவியும், திருவாளர்கள் யோ. பெனடிக்ற் சதானந்தம் (கட்டட ஒப்பந்தகாரர்), யோ. அ. அன்ரனி சிறில் (தபாற்கந்தோர், மதவாச்சி) யோ. விக்ரர் அன்ரனி, செல்வி யோசெப் மேரிமக்டலின் பொன்ஜேஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. மனுவல்கஸ்பார் செல்லத்துரை அவர்களின் மைத்துனியுமாகிய திருமதி அன்னம்மா யோசெப் அவர்கள் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதியிலுள்ள 38/1 இலக்க இல்லத்தில் 20-4-65 காலை 11 மணிக்குக் காலமானார். அன்னாரின் சடலம் 21-4-1965 புதன் மாலை 4-30 மணிக்கு அவரது (மேற்படி) இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் ஆசனக்கோவிற் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 73

# 800 பேருக்கு சீட்டு கிழியும்!

கொழும்பு, செவ்வாய்

கடந்த டிசம்பர் மாதம் முதல் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் 800 பேர் புதிதாக வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதாயும், இவர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நேற்று கூடிய அரசாங்க பாராளுமன்றக் கட்சியில் அறிவிக்கப்பட்டது. இவர்கள் கூ மொ வி ஸ்தாபன சபையின் அங்கீகாரமின்றியும், குறிப்பிட்ட தொகுதிகளிலிருந்து தகுதி எதுவுமின்றியும் வேலைக்கமர்த்தப்பட்டதாயும், எவ்வித குறிப்பிட்ட வேலையுமின்றி அவர்கள் இயங்கி வந்ததாயும் மேலும் அறிவிக்கப்பட்டது, கூ. மொ வி க்கு தேவையான ஊழியர்கள் உரிய முறையில் திரட்டப்படுவார்கள் என்றும், விலக்கப்பட்டவர்கள் தராதரம் எதுவும் பார்க்கப்படமாட்டாதென்றும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org